**அரசகரும மொழிகள் ஆணைக்கும் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் ஆணைக்குழு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழு உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது ஆணைக்குழுவின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 43 ஆம் பிரிவின் பிரகாரம் பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீட்டின் போது ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் உரிய தொழிற்தகைமை உள்ள மதிப்பீட்டு தொழிலின் அங்கத்தவர் ஒருவரினால் மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் பிரதான எழுதுவினைஞர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் வேறொரு நிறுவனத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோர்களை | எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக எழுத்து மூலம் கோரிக்கையொன்று மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு உத்தியோகத்தரை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

உள்ளடக்கிய சபையினால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் நியமத்தின் 52 ஆவது பிரிவின் பிரகாரம் மீள்மதிப்பீட்டின் விளைவாக சொத்து தொகுதியொன்றில் இழிவுப் பெறுமதி அதிகரிக்குமிடத்து, அந்த அதிகரிப்பு நேரடியாக மீள்மதிப்பீட்டு மிகையில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அந்த அளவு ஏனைய ஒதுக்கமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அறைகளை பிரித்து வேறுபடுத்தும் பணிக்காக ஒப்பந்ததாரருக்கு மீளாய்வாண்டின் இறுதி வரை செலுத்தப்பட்ட ரூபா 2,428,510 தொகையான வேலைப் பெறுமதி நடைமுறை வேலையாக நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்குப் பதிலாக கட்டிடம் மற்றும் நிர்மாணமாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதனால் கட்டிடத்தின் பெறுமதி அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த நடைமுறை வேலையின் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்குரிய அளவிடைப் பத்திரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே கழிவறை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்காக கூட்டுமொத்தமாக ரூபா 868,837 நடைமுறை வேலையாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக உறுதிப்படுத்தப்பட்ட வேலைப் பத்திரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021.07.27 ஆந் திகதி வரையில் அறைகளை பிரித்து வேறுபடுத்தும் பணிகளில் 70 சதவீத வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தொழில்நுட்ப பரிந்துரையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த 70 சதவீத அறைகளை பிரித்து வேறுபடுத்தும் பகுதி பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்படுகின்றமையால் கட்டிடம் மற்றும் நிர்மாணங்களாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அதனை பாவனைக்கு எடுத்த 05 மாத காலத்திற்காக பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதை குறிப்பிடுகின்றோம். எனினும், தற்போது அந்த பணிகள் 100 சதவீதமும் பூர்த்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்றமையை மேலும் குறிப்பிடுகின்றோம். | கட்டிட நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்து பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் வரை நிதிக் கூற்றுக்களில் நடைமுறை வேலையாக காண்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன் நிர்மாணங்களின் நடைமுறை ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது நடைமுறைச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த இணையதளத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 614,800 கிரயம் கற்பனைச் சொத்தாக கணக்கீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டு சரிசெய்து கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1991 இன் 18 ஆம் இலக்க அரச கரும மொழிகள் ஆணைக்குழு சட்டத்தின் II ஆம் பகுதியின் 13(3) ஆம் பிரிவு | பிரிவின் பிரகாரம் தலைவர் ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக இருந்த போதும், அவர் ஆணைக்குழுவின் பதவியணியின் அங்கத்தவர் ஒருவராக இல்லாதிருந்த போதிலும் ஆணைக்குழுவின் காசோலைகளில் கையொப்பமிடும் பணிகளில் நிரந்தரமாக ஈடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் கணக்குகள் "தலைவர், அரசகரும மொழிகள் ஆணைக்குழு" என்ற பெயரில் கணக்கு திறக்கப்பட்டிருந்தது. அதனால் இந்தக் கணக்கு ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் தலைவரின் கையொப்பம் கணக்கிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் காசோலை கையொப்பமிடலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பந்தி | ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீடு நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க | 2021 இன் பாதீட்டு அறிக்கை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு 2021 பெப்ரவரி மாதத்திலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் அது வரிசை அமைச்சிற்கும், பொதுத் திறைசேரிக்கும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன் | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வில்லை. | ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 552,524 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,835,397 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,387,921 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீளாய்வாண்டின் செலவினங்கள் ரூபா 3,960,849 இனால் அதிகரித்தமையும், திறைசேரியிலிருந்து கிடைத்த மீண்டெழும் பெறுவனவுகள் ரூபா 6,404,000 இனால் அதிகரித்தமையும் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சட்டரீதியான கட்டிட உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் ஆணைக்குழுவின் தலைவரின் உத்தியோகபூர்வ அறைக்கு அடுத்தால் கழிவறையொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,251,126 பெறுமதியான (வற் உடன்) உடன்படிக்கை பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி கைச்சாத்திடப்பட்டிருந்த துடன் கழிவறை நிர்மாணிப்பதற்காக செலவிடப்படுகின்ற தொகையை மீண்டும் அறவிடும் முறை தொடர்பாக நகர சபையுடன் இணக்கப்பாட்டிற்கு வராமையால் அந்தப் பணத்தை மீள அறவிடுவதில் பிரச்சினைகளுடனான நிலைமை ஏற்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இந்தக் கட்டிடம் நீண்ட கால வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சொத்தொன்றாக கழிவறை நீண்டகாலமாக ஆணைக்குழுவின் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு முடியும். | நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு முன்னர் சட்டரீதியான உடன்படிக்கையில் கைச்சாத்திடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் போது ஆணைக்குழு தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல்கள் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போது அலுவலகத்தை பகுதிகளாக பிரித்தல், மின்சார முறைமை மற்றும் காபட் இடல், வளிப்பதனாக்கி, உள்ளக தொலைபேசி முறைமை போன்றவைகளுக்காக ரூபா 2,687,043 செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது. அவ்வாறிருக்கும் போது 04 வருடங்களின் பின்னர் மீண்டும் வேறொரு இடமொன்றில் ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கு மீண்டும் அறவிட முடியாத ரூபா 4,720,427 செலவினம் செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஆணைக்குழுவை தற்போதைய அலுவலக வளாகத்தில் நீண்டகாலமாக நடாத்திச் செல்வதற்கு முடியுமாக உள்ளது. அதனால் இந்த அலுவலக வளாகத்திற்காக செலவிடப்பட்ட செலவினம் ஆணைக்குழுவின் அலுவலகத்திற்காக மேற்கொள்ளப்பட்ட நீண்டகால முதலீடாக கருத முடியும். | சரியான பிரகாரம் செலவினங்கள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் மாதம் 01 ஆந் திகதி கட்டிடத்தை வாடகைக்கு எடுப்பதற்காக ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை மாநகர சபையுடன் உடன்படிக்கை செய்திருந்த போதிலும் அதற்கு முன்னரே அலுவலகத்தை பகுதிகளாக பிரிக்கும் செயற்பாடுகளுக்காக சஹறா கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்துடன் ரூபா 3,469,301 பெறுமதியான (வற் உடன்) உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு ரூபா 1,697,737 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் இதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரமேனும் பெறப்பட்டிருக்கவில்லை. | அலுவலகத்தை பகுதிகளாக பிரித்து அமைப்பதற்காக சஹறா கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தை தெரிவு செய்வதற்குரிய கேள்வி தீர்மானத்திற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அலுவலகத்தை பகுதிகளாக பிரிப்பதற்குரிய கேள்வித் தீர்மானம் ஆணைக்குழுவின் மேவுகை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | உரிய அங்கீகாரத்தைப பெற்றுக் கொண்டதன் பின்னர் மாத்திரம் கொடுப்பனவைச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |